**ASSISTANT PROFESSOR OF PSYCHOLOGY - CUM- CLINICAL PSYCHOLOGIST IN TAMIL NADU MEDICAL SERVICE - 24-03-2023**

1. The system of classification proposed by Carolus Linnaeus is
   a. Natural system
   b. Phylogenetic system
   c. Modern system
   **d. Artificial system**
   e. Answer not known

   கரோலஸ் லின்னேயஸ் முன்மொழிந்த வகைப்பாட்டு முறை எது?
   a. இயற்கை முறை
   b. இனப்பரிணாம வழிமுறை
   c. அண்மைக்கால முறை
   d. செயற்கை முறை
   e. விடை தெரியவில்லை

2. Identify the incorrect statement with reference to Prokaryotic cell.
   a. Lack of membrane bound genetic material
   b. Presence of 70S Ribosomes
   c. Presence of Mesosomes
   **d. Presence of membrane bound organelles like chloroplast and mitochondria**
   e. Answer not known

   ப்ரோகேரியாட்டிக் செல் குறித்து தவறான கூற்றினை கண்டுபிடிக்கவும்.
   a. சவ்வினால் சூழப்பட்ட மரபணுப் பொருள் கிடையாது.
   b. 70S வகை ரைபோசோம்கள் காணப்படுகிறது.
   c. மீசோசோம்கள் காணப்படுகிறது.
   d. சவ்வினால் சூழப்பட்ட செல் உறுப்புகளான பசுங்கணிகம் மற்றும் மைட்டோகாண்டிரிய காணப்படுகிறது.
   e. விடை தெரியவில்லை

3. Choose the one which is not a Heptahydrate.
   (i) Green vitriol
   (ii) White vitriol
   (iii) Blue vitriol
   (iv) Red vitriol

   a. (i) and (ii) only
   **b. (iii) only**
   c. (iv) only
   d. (iii) and (iv) only
   e. Answer not known

   கீழ்க்காண்பனவற்றில் எது ஹெப்டா ஹைடிரேட் அல்ல?
   (i) பச்சை விட்டிரியால்
   (ii) வெள்ளை விட்டிரியால்
   (iii) நீல விட்டிரியால்
   (iv) சிவப்பு விட்டிரியால்

   a. (i) மற்றும் (ii) மட்டும்
   **b. (iii) மற்றும்**
   c. (iv) மட்டும்
   d. (iii) மற்றும் (iv) மட்டும்
   e. விடை தெரியவில்லை

4. The insecticides that act as a nerve poison is
a. Endrin b. Ethylene dichloride **c. Malathion**
d. Lead Arsenite e. Answer not known
நரம்பு நஞ்சாகச் செயல்படும் பூச்சி கொல்லி _____ ஆகும்.
a. எண்ட்ரின் b. எத்திலீன் டை குளோரைடு c. மாலதியான்
d. ஈய ஆர்சினைட் e. விடை தெரியவில்லை

5. Arrange the hormones in order during the female reproductive cycle.
(1) Luteinizing hormone
(2) Progesterone
(3) Prolactin
(4) Follicle stimulating hormone
a. 2, 4, 1, 3 b. 4, 1, 2, 3 c. 3, 4, 1, 2
**d. 1, 4, 2, 3** e. Answer not known
பெண் இனப்பெருக்க சுழற்சியின் வரிசையில் ஹார்மோன்களை வரிசைப்படுத்தவும்.
(1) லுடினைசிங் ஹார்மோன்
(2) புரோஜெஸ்ட்டிரோன்
(3) ப்ரோலாக்டின்
(4) கருமுட்டை தூண்டும் ஹார்மோன்
a. 2, 4, 1, 3 b. 4, 1, 2, 3 c. 3, 4, 1, 2
**d. 1, 4, 2, 3** e. விடை தெரியவில்லை

6. In the body wall of ascaris, the correct sequence of layers from outside towards inner side is
**a. Cuticle, epidermis, longitudinal muscles**
b. Cuticle, epidermis, longitudinal and circular muscles
c. Epidermis, longitudinal and circular muscles, cuticle
d. Epidermis, cuticle, longitudinal muscles
e. Answer not known
உருளைப்புழு உடல் சுவரில், வெளியில் இருந்து உள் பக்கமாக உள்ள அடுக்குகளின் சரியான வரிசை.
a. க்யூட்டிகல், மேல்தோல், நீளமான தசைகள்
b. க்யூட்டிகல், மேல்தோல், நீளமான தசைகள் மற்றும் வட்ட தசைகள்
c. மேல்தோல், நீளமான மற்றும் வட்ட தசைகள், க்யூட்டிகல்
d. மேல்தோல், க்யூட்டிகல், நீளமான தசைகள்
e. விடை தெரியவில்லை

7. Which of the following statement will fit for Lamprey?
(i) Lives in sea and migrates to the rivers of spawning.
(ii) Endoparasites
(iii) Jawless animal
a. (i) and (ii) only b. (ii) only **c. (i) and (iii) only**
d. (iii) only e. Answer not known
கீழ்க்கண்டவற்றுள் எந்தக் கூற்று லாம்ப்ரேக்கு பொருத்தமாக அமையும்?
(i) கடலில் வாழ்கிறது மற்றும் முட்டையிடுவதற்காக நதிக்கு வலசை செல்கிறது
(ii) அக ஒட்டுண்ணிகள்
(iii) தாடையற்ற விலங்கு
a. (i) மற்றும் (ii) மட்டும் b. (ii) மட்டும் **c. (i)** மற்றும் **(iii)** மட்டும்
d. (iii) மட்டும் e. விடை தெரியவில்லை

8. Match the political parties with their founding years.

| | |
|---|---|
| A. Indian National congress | 1. 2013 |
| B. All India Trinamool congress | 2. 1925 |
| C. National people's party | 3. 1885 |
| D. Communist Party of India (CPI) | 4. 1998 |

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 2 | 3 | 4 | 1 |
| **b.** | **3** | **4** | **1** | **2** |
| c. | 3 | 2 | 1 | 4 |
| d. | 1 | 4 | 3 | 2 |

e. Answer not known

அரசியல் கட்சிகளை அவைகள் உருவாக்கப்பட்ட வருடங்களுடன் பொருத்தவும்.

| | |
|---|---|
| A. இந்திய தேசிய காங்கிரஸ் | 1. 2013 |
| B. அகில இந்தியா திரிணமூல் காங்கிரஸ் | 2. 1925 |
| C. தேசிய மக்கள் கட்சி | 3. 1885 |
| D. இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (CPI) | 4. 1998 |

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 2 | 3 | 4 | 1 |
| **b.** | **3** | **4** | **1** | **2** |
| c. | 3 | 2 | 1 | 4 |
| d. | 1 | 4 | 3 | 2 |

e. விடை தெரியவில்லை

9. Name the plant developed for an innovative low-volume fixed model for biogas production by the Vivekananda Kendra of Tamilnadu.

a. **Shakthi Surabhi** b. Shakthi Tamil Nadu c. Shakthi India
d. Waste to energy e. Answer not known

தமிழக விவேகானந்தா கேந்திராவின் புதிய முறை உயிரி வாயுவினை உற்பத்தி செய்யும் மாதிரி சாதனமானது _______ என்று அழைக்கப்படுகிறது.

a. சக்தி சுரபி b. சக்தி தமிழ்நாடு c. சக்தி இந்தியா
d. கழிவில் இருந்து ஆற்றல் e. விடை தெரியவில்லை

10. Which of the following are incorrectly paired?

| | | |
|---|---|---|
| 1. Gaganyaan project | - | DFRS |
| 2. Chandrayaan 2 | - | DFRS |
| 3. Communication satellite | - | GSAT-24 |
| 4. Small satellite launch vehicle | - | SSLV-D1/EOS-02 |

**a. 1 and 2** b. 2 and 4 c. 3 and 4
d. 2 and 3 e. Answer not known

கீழ்க்காண்பவற்றுள் எவை தவறாக இணைந்துள்ளன?

| | | |
|---|---|---|
| 1. ககன்யான் திட்டம் | - | DFRS |
| 2. சந்திராயான் 2 | - | CES |
| 3. தகவல் தொடர்பு செயற்கைகோள் | - | GSAT-24 |
| 4. சிறிய செயற்கைகோள் ஏவு வாகனம் | - | SSLV-D1/EOS-02 |

a. 1 மற்றும் 2 b. 2 மற்றும் 4 c. 3 மற்றும் 4
d. 2 மற்றும் 3 e. விடை தெரியவில்லை

11. Consider the following statements and choose the right option for what under – population means

Statement 1: A situation where the number of people that can be supported is the same as the available resources
Statement 2: A situation where by the population is considered too large for the available resources.
Statement 3: A situation where the population is less than the available resources of a country.

a. Statement I, II and III are right
b. Statement I is correct and II and III are incorrect
c. Statement II is correct and I and III are incorrect
**d. Statement III is correct and I and II are incorrect**
e. Answer not known

பின்வரும் வாக்கியங்களை கவனமாகக் கருத்தில் கொண்டு கொடுக்கப்பட்டுள்ளனவற்றுள் "குறைந்த மக்கள் தொகை" குறித்து சரியான வாக்கியத்தை தேர்ந்தெடு
வாக்கியம் 1: ஒரு குறிப்பிட்ட இடத்தில் காணப்படும் வளங்களும் மக்கள் தொகையும் சரியான விகிதத்தில் காணப்படுவது
வாக்கியம் 2: ஒரு குறிப்பிட்ட இடத்தில். காணப்படும் வளங்களைவிட மக்கட்தொகை மிகுதியாக காணப்படுவது
வாக்கியம் 3: ஒரு குறிப்பிட்ட இடத்தில் காணப்படும் வளங்களைவிட மக்கட்தொகை குறைந்து காணப்படுதல்

a. வாக்கியங்கள் I, II மற்றும் III சரி
b. வாக்கியம் I சரி II மற்றும் III தவறு
c. வாக்கியம் II சரி I மற்றும் III தவறு
d. வாக்கியம் III சரி I மற்றும் II தவறு
e. விடை தெரியவில்லை

12. Which one of the following Indian states is the leading producer of silver?
**a. Andhra Pradesh** b. Tamil Nadu c. Kerala
d. Bihar e. Answer not known
கீழ்கண்ட இந்திய மாநிலங்களில் வெள்ளி உற்பத்தியில் முதல் இடம் பிடிக்கும் மாநிலம் எது?
a. ஆந்திரப் பிரதேசம் b. தமிழ்நாடு c. கேரளா
d. பீஹார் e. விடை தெரியவில்லை

13. Vallanadu wildlife sanctuary is located at
a. Coimbatore **b. Thoothukudi** c. Erode
d. Ooty e. Answer not known
வளநாடு வனவிலங்கு சரணாலயம் எங்கு அமைந்துள்ளது?
a. கோயம்புத்தூர் b. தூத்துக்குடி c. ஈரோடு
d. ஊட்டி e. விடை தெரியவில்லை

14. Choose the rightly matched pair.

| River | Length in Km |
|---|---|
| A. Godaveri | 1. 1565 |
| B. Krishna | 2. 1400 |
| C. Narmada | 3. 1310 |
| D. Mahanadi | 4. 1205 |

a. A and C are correct b. A and B are correct **c. B and C are correct**
d. C and D are correct e. Answer not known
கீழே கொடுக்கப்பட்டள்ளவற்றுள் சரியான பொருத்தங்களைத் தேர்வு செய்க.

| நதிகள் | நீளம் (கிமீ) |
|---|---|
| A. கோதாவரி | 1. 1565 |
| B. கிருஷ்ணா | 2. 1400 |

C. நர்மதை 3. 1310
D. மகாநதி 4. 1205
a. A மற்றும் C சரி b. A மற்றும் B சரி **c. B மற்றும் C சரி**
d. C மற்றும் D சரி e. விடை தெரியவில்லை

15. Which among the following separates greater and lesser Himalaya?
a. Karol Basin **b. Main central thrust** c. Dun valley
d. Kathmandu valley e. Answer not known
பின்வருபவைகளில் எது இமயமலையின் அதிக உயரமுள்ள பகுதிகளையும் குறைந்த உயரமுள்ள பகுதிகளையும் பிரிக்கிறது?
a. கரோல் நீர்வடிகால் b. மத்தியப் பெரும் உந்தம் c. டூன் பள்ளத்தாக்கு
d. காட்மாண்டு பள்ளத்தாக்கு e. விடை தெரியவில்லை

16. Which one is the Poineer satellite of India?
a. Bhaskara **b. Aryabhata** c. PSLV
d. INSAT e. Answer not known
இந்தியாவின் அறிமுக செயற்கை கோள் எது?
a. பாஸ்கரா b. ஆர்யபட்டா c. பி எஸ் எல் வி
d. இன்சாட் e. விடை தெரியவில்லை

17. Which of the following statements are true about the Harappan People?
(i) The Harappans were the Phallus Worshippers.
(ii) They worshipped gods in the form of human beings.
(iii) They placed their gods in temples.
a. (i) only b. (i) and (iii) only **c. (i) and (ii) only**
d. (ii) and (iii) only e. Answer not known
ஹரப்பன் மக்களைப் பற்றிய பின்வரும் கூற்றுகளில் எது/எவை உண்மை?
(i) ஹரப்பன்கள் ஃபாலஸ்-ஐ வழிபடுபவர்கள்.
(ii) அவர்கள் மனித உருவில் தெய்வங்களை வழிபட்டனர்.
(iii) அவர்கள் தங்கள் தெய்வங்களைக் கோவில்களில் வைத்தார்கள்.
a. (i) மட்டும் b. (i) மற்றும் (iii) மட்டும் c. (i) மற்றும் (ii) மட்டும்
d. (ii) மற்றும் (iii) மட்டும் e. விடை தெரியவில்லை

18. Match List I with List II and select the correct answer:

| List I | List II |
|---|---|
| A. Vishakhadatta | 1. Nitisastra |
| B. Kamandaka | 2. Niyaya Bhashya |
| C. Asanga | 3. Mudraraksha |
| D. Vatsyayana | 4. Bhumi Sastra |

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 4 | 2 | 1 | 3 |
| **b.** | **3** | **1** | **4** | **2** |
| c. | 3 | 2 | 1 | 4 |
| d. | 1 | 3 | 2 | 4 |

e. Answer not known

பட்டியல் Iஐ பட்டியல் II – உடன் பொருத்தி சரியான விடையை தேர்தெடுத்து எழுதுக:

| பட்டியல் I | பட்டியல் II |
|---|---|
| A. விஸாகதத்தர் | 1. நீதி சாஸ்திரம் |
| B. காமாந்தகர் | 2. நியாய பாஷ்யம் |
| C. அஸங்கர் | 3. முத்ர ராக்ஷஷம் |

D. வாஸ்த்யாயனர் 4. பூமி சாஸ்திரம்

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 4 | 2 | 1 | 3 |
| **b.** | **3** | **1** | **4** | **2** |
| c. | 3 | 2 | 1 | 4 |
| d. | 1 | 3 | 2 | 4 |

e. விடை தெரியவில்லை

19. Devi Chandra Guptan deals with the life history of
a. Chandra Gupta I **b. Chandra Gupta II** c. Samudra Gupta
d. Skanda Gupta e. Answer not known
தேவி சந்திர குப்தம் யாருடைய வாழ்க்கை வரலாற்றை பற்றி கூறுகிறது?
a. முதலாம் சந்திர குப்தர் b. இரண்டாம் சந்திர குப்தர்
c. சமுத்திர குப்தர் d. ஸ்கந்த குப்தர்
e. விடை தெரியவில்லை

20. In whose reign did the Sultanate reach its maximum geographical limit?
a. Ala-Ud-Din Khilji b. Mubarak Shah Khilji
**c. Muhammed-Bin-Tughlak** d. Ghiyasuddin Tugalak
e. Answer not known
எந்த சுல்தானியர் ஆட்சியில் மிக அதிகமான நிலப்பரப்பு அரசாட்சியின் எல்லையாக இருந்தது?
a. அலாவுதின் கில்ஜி b. முபாரக் ஷா கில்ஜி
c. முகம்மது-பின்-துக்ளக் d. கியாசுதின் துக்ளக்
e. விடை தெரியவில்லை

21. Choose the wrongly matched pairs.
(1) Ashtapradhan - Council of Eight Ministers
(2) Sardeshmukhi - Tax on territories
(3) Chauth - Custom duty
(4) Amatya - Foreign Minister
a. (1) and (2) are correct **b. (3) and (4) are correct** c. (2) and (3) are correct
d. (1) and (4) are correct e. Answer not known
தவறான பொருத்தங்களைத் தேர்வு செய்க.
(1) அஷ்ட்டபிரதான் - எட்டு அமைச்சர் குழு
(2) சர்தேஷ்முகி - பிரதேச வரி
(3) சவுத் - சுங்கவரி
(4) அமத்தியா - வெளிநாட்டுத் துறை அமைச்சர்
a. (1) மற்றும் (2) சரி b. (3) மற்றும் (4) சரி c. (2) மற்றும் (3) சரி
d. (1) மற்றும் (4) சரி e. விடை தெரியவில்லை

22. Name the Mughal ruler who initiated a programme of building sea-going vessels.
a. Babur b. Akbar **c. Shahjahan**
d. Aurangazeb e. Answer not known
கடல் செல்கலன் கட்டும் திட்டத்தை முன்னெடுத்த முகலாய மன்னர் பெயர்
a. பாபர் b. அக்பர் c. ஷாஜஹான்
c. ஔரங்கசீப் e. விடை தெரியவில்லை

23. The principle construction material used by Shahjahan to built Jumma Masjit at Delhi
a. Yellow Sand Stone **b. Red Sand Stone** c. Black Sand Stone
d. Metal e. Answer not known

ஷாஜஹான் டெல்லியில் ஜூம்மா மசூதியினை கட்டப் பயன்படுத்திய அடிப்படை கட்டுமானப் பொருள் எது?

a. மஞ்சள் மணற்கல்　b. சிவப்பு மணற்கல்　c. கருப்பு மணற்கல்

d. உலோகம்　e. விடை தெரியவில்லை

24. Which of the given statements is/are correct?

(i) Amir Khusroe, Abul Fazal, Ziauddin Barani were famous persian Historians in Medieval period.

(ii) Tughlaq Nama, Akbar Nama, Tarik Firoz Shahi are the books written by them respectively.

a. (i) and (ii) are wrong　b. (i) correct (ii) wrong

**c. Both (i), (ii) are correct**　d. (i) wrong (ii) correct

e. Answer not known

பின்வரும் கூற்றுகளில் எது சரியான கூற்று/கூற்றுகள் என்பதை எடுத்து எழுதுக?

(i) அமீர் குஸ்ரு, அபுல் பாஸல், ஜியாவுதீன் பரணி ஆகியோர், இடைக்கால பாரசீக வரலாற்று ஆசிரியர்கள்.

(ii) துக்ளக் நாமா, அக்பர் நாமா, தாரிக் ∴பிரோஷாகி ஆகிய நூல்கள் இவர்களால் முறையே எழுதப்பட்டவை ஆகும்.

a. (i) மற்றும் (ii) தவறு　b. (i) சரி (ii) தவறு

c. (i) மற்றும் (ii) சரி　d. (i) தவறு (ii) சரி

e. விடை தெரியவில்லை

25. Name the rulers who had organized a military department called Kandachara.

**a. Vijayanagar rulers**　b. Bahmini Sultans　c. Marathas

d. Mughals　e. Answer not known

"கண்டசாரா" என்றழைக்கப்படும் ஒழுங்கான ராணுவத்துறையினை கொண்டிருந்த அரசர்கள்

a. விஜயநகர ஆட்சியாளர்கள்　b. பாமினி சுல்தான்கள்　c. மராத்தியர்கள்

d. மொகலாயர்கள்　e. விடை தெரியவில்லை

26. Which one of the following is NOT a qualification to become a President?

a. He must have completed 35 years of age

**b. He must be qualified to become a member of Rajya Sabha**

c. He must be a citizen of India

d. He should not hold any office of profit

e. Answer not known

கீழ்க்காண்பவற்றில் எது குடியரசுத் தலைவர் ஆவதற்கான தகுதி கிடையாது?

a. 35 வயது நிறைவு செய்தவராக இருக்க வேண்டும்

b. மாநிலங்களவை உறுப்பினர் ஆவதற்கான தகுதியைப் பெற்றிருக்க வேண்டும்

c. இந்தியக் குடிமகனாக இருக்க வேண்டும்

d. ஆதாயம் தரும் பதவி ஏதும் வகிக்கக் கூடாது

e. விடை தெரியவில்லை

27. What sort of democracy would the Right to Information promote?

a. Direct democracy　b. Representative democracy

c. Procedural democracy　**d. Participatory democracy**

e. Answer not known

எவ்வகையான மக்களாட்சி முறையைத் தகவல் அறியும் உரிமை வளர்த்தெடுக்கக் கூடும்?

a. நேரடியான மக்களாட்சி　b. பிரதிநிதித்துவ மக்களாட்சி

c. நடைமுறைசார்ந்த மக்களாட்சி　d. பங்கேற்பு மக்களாட்சி

e. விடை தெரியவில்லை

28. Which one of the following rights was described by Dr. B.R. Ambedkar as the heart and soul of the constitution?
a. Right to freedom of Religion b. Right to property
c. Right to Equality **d. Right to constitutional Remedies**
e. Answer not known
பின்வருனவற்றுள் எது Dr. B.R. அம்பேத்காரால் அரசியலமைப்பின் இதயம் மற்றும் ஆன்மா என விவரிக்கப்பட்டது?
a. மதச்சுதந்திரத்திற்கான உரிமை b. சொத்துரிமை
c. சமத்துவத்திற்கான உரிமை d. அரசியலமைப்புத் தீர்வுகளுக்கான உரிமை
e. விடை தெரியவில்லை

29. The Verma committee on Fundamental Duties of citizens submitted its report in the year
a. 1997 b. 1998 **c. 1999**
d. 2000 e. Answer not known
குடிமக்களின் அடிப்படைக் கடமைகள் தொடர்பான வர்மா குழுவின் அறிக்கை ஒப்படைக்கப்பட்ட ஆண்டு
a. 1997 b. 1998 **c. 1999**
d. 2000 e. விடை தெரியவில்லை

30. The states Reorganisation commission was appointed in the year
**a. 1953** b. 1960 c. 1950
d. 1952 e. Answer not known
மாநிலங்களின் மறு சீர் அமைப்பு ஆணையம் அமைக்கப்பட்ட ஆண்டு
**a. 1953** b. 1960 c. 1950
d. 1952 e. விடை தெரியவில்லை

31. Which of the following statements about Right to Information is correct?
**a. All public Authorities covered under RTI must appoint their Public Information officer.**
b. The RTI was adopted by the Indian Parliament in 2004.
c. The PIO has to reply the request within 35 days.
d. The nominal fees for filing a request is Rs. 25.
e. Answer not known
தகவல் பெறும் உரிமை சட்டத்தைப் பற்றி பின்வருவனவற்றுள் எது சரியானது?
a. தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் உள்ள அனைத்து அரசு அதிகாரிகளும், பொது தகவல் அலுவலரை நியமிக்க வேண்டும்.
b. தகவல் அறியும் உரிமை சட்டம் இந்திய பாராளுமன்றத்தில் 2004 இல் இயற்றப்பட்டது.
c. பொது தகவல் அலுவலர் கோரிக்கைகளுக்கான பதிலை 35 நாட்களுக்குள் தரவேண்டும்.
d. கோரிக்கைகளை தாக்கல் செய்ய குறைந்த பட்சக் கட்டணம் ரூ. 25 ஆகும்.
e. விடை தெரியவில்லை

32. The number of members of the Rajya Sabha, nominated by president of India are
a. 2 b. 10 **c. 12** d. 15 e. Answer not known
இந்திய குடியரசுத்தலைவரால் ராஜ்யசபையில் நியமிக்கப்படும் உறுப்பினர்களின் எண்ணிக்கை ____ ஆகும்.
a. 2 b. 10 **c. 12** d. 15 e. விடை தெரியவில்லை

33. Consider the following statements

(i) Functions of State Human Rights Commission are mainly recommendatory in Nature.
(ii) The recommendation of State Human Rights Commission are binding on the State Government

Which of the state given above is/are correct?

**a. (i) only** b. (ii) only c. Both (i) and (ii)
d. None e. Answer not known

கீழ்கண்ட கூற்றுக்களை ஆராய்க.

(i) மாநில மனித உரிமை கழகத்தின் செயல்பாடுகள் அடிப்படையில் ஆலோசனை அமைப்பாக செயல்படுகிறது.
(ii) மாநில மனித உரிமை கழகத்தின் ஆலோசனையானது மாநில அரசாங்கத்துடன் பிணைந்திருக்கக் கூடியது.

மேற்கண்ட கூற்றுகளில் எது/எவை சரியானவை?

a. (i) சரி b. (ii) சரி c. (i) மற்றும் (ii) சரி
d. எதுவுமில்லை e. விடை தெரியவில்லை

34. The Relationship between gross domestic product and unemployment is represented by

a. Gini coefficient **b. Okun's Law** c. Lorenz curve
d. Phillips Curve e. Answer not known

மொத்த உள்நாட்டு உற்பத்தி மற்றும் வேலையின்மைக்கு இடையே உள்ள தொடர்பை எடுத்துக்காட்டுவது

a. கினி கெழு b. ஒகுன்ஸ் விதி c. லாரன்ஸ் வளைகோடு
d. பிலிப்ஸ் வளைகோடு e. விடை தெரியவில்லை

35. The principles of income tax of the Govt. of India based on

(i) Ability to pay
(ii) Taxable capacity
(iii) Canon of equality

Select the correct answer by using the codes given below:

a. (i) and (ii) are correct b. (ii) and (iii) are correct **c. (i) only is correct**
d. (iii) alone is correct e. Answer not known

இந்திய அரசின் வருமான வரி கொள்கையானது இதன் அடிப்படையில் அமைந்துள்ளது.

(i) செலுத்தும் திறன்
(ii) வரி தாங்கும் திறன்
(iii) சமத்துவ விதி

குறியீடுகளைப் பயன்படுத்தி சரியான விடையைத் தெரிவு செய்க.

a. (i) மற்றும் (ii) சரியானவை b. (ii) மற்றும் (iii) சரியானவை
c. (i) மற்றும் சரியானது d. (iii) மற்றும் சரியானது
e. விடை தெரியவில்லை

36. In India GST came into effect from

a. 1 July 2014 b. 1 July 2016 **c. 1 July 2017**
d. 1 July 2015 e. Answer not known

இந்தியாவில் ஜிஎஸ்டி _______ முதல் நடைமுறைக்கு வந்தது.

a. 1 ஜுலை 2014 b. 1 ஜுலை 2016 c. 1 ஜுலை 2017
d. 1 ஜுலை 2015 e. விடை தெரியவில்லை

37. According to the 2011 census National Average Literacy Rate in India was

**a. 74.04%** b. 74.02% c. 74.08%
d. 74.10% e. Answer not known

2011 மக்கட் தொகை கணக்கெடுப்பின்படி இந்தியாவில் தேசிய சராசரி எழுத்தறிவு விகிதம்.
**a. 74.04** சதவீதம் b. 74.02 சதவீதம் c. 74.08 சதவீதம்
d. 74.10 சதவீதம் e. விடை தெரியவில்லை

38. The apex bank of rural credit is
**a. NABARD** b. RBI c. IDBI
d. RRB e. Answer not known
கிராமப்புறக் கடனுக்கான உச்ச வங்கி
a. நபார்டு b. ஆர்பிஐ c. ஐடிபிஐ
d. ஆர்ஆர்பி e. விடை தெரியவில்லை

39. What was the need for land reforms in India?
(i) Agricultural holding was get divided
(ii) The sown area of land per person are increasing
(iii) Productivity decreased
a. (i) is true but (ii) and (iii) are false **b. (i) and (iii) are true but (ii) is false**
c. (i) is false but (ii) and (iii) are true d. All are true
e. Answer not known
இந்தியாவில் நில சீர்திருத்தங்களுக்கான அவசியம் என்ன?
(i) விவசாய நிலம் பிரிக்கப்பட்டது
(ii) ஒரு நபருக்கான விதைக்கப்பட்ட நிலத்தின் பரப்பளவு அதிகரித்து வருகிறது.
(iii) உற்பத்தி திறன் குறைந்து வருகிறது
a. (i) மட்டும் சரி; ஆனால் (ii) மற்றும் (iii) தவறானவை
b. (i) மற்றும் (iii) சரி; ஆனால் (ii) மட்டும் தவறானது
c. (i) மட்டும் தவறானது; ஆனால் (ii) மற்றும் (iii) சரி
d. அனைத்தும் சரி
e. விடை தெரியவில்லை

40. A scheme having Cultivable Command Area (CCA) of more than 10,000 hectares of irrigated area is known as
**a. Major Irrigation Schemes** b. Medium Irrigation Schemes
c. Minor Irrigation Schemes d. Tiny Irrigation Schemes
e. Answer not known
10,000 ஹெக்டேருக்கு அதிகமான விளை நிலங்களுக்கு (CCA) பாசன வசதி வழங்கும் திட்டத்தினை ______ எனலாம்.
a. பெரிய நீர்ப்பாசனத் திட்டம் b. நடுத்தர நீர்ப்பாசனத் திட்டம்
c. சிறிய நீர்ப்பாசனத் திட்டம் d. குறு நீர்ப்பாசனத் திட்டம்
e. விடை தெரியவில்லை

41. Assertion [A]: "Vande Mataram" was adopted as the slogan for an agitation.
Reason [R]: It was adopted during the Swadeshi Movement in protest against partition of Bengal.
a. [A] is true but [R] is false
**b. Both [A] and [R] are true, and [R] is the correct explanation of [A]**
c. [A] is false, [R] is true
d. Both [A], [R] are true, but [R] is not the correct explanation of [A]
e. Answer not known
கூற்று [A]: "வந்தே மாதரம்" என்பது போராட்டத்திற்கான முழக்கமாக ஏற்றுக்கொள்ளப்பட்டது

விளக்கம் [R]: வங்காளப் பிரிவினைக்கு எதிரான சுதேசி இயக்கத்தின் போது ஏற்றுக்கொள்ளப்பட்டது.

a. [A] சரி ஆனால் [R] தவறு

b. [A] மற்றும் [R] சரி, என்பது [A]-வின் சரியான விளக்கமாகும்

c. [A] தவறானது, [R] சரியானது

d. [A] மற்றும் [R] சரியானது ஆனால் [R], [A]-வின் சரியான விளக்கமல்ல

e. விடை தெரியவில்லை

42. Name the earliest and the best known mutinies before the 'Revolt of 1857'

a. The Native Infantry Mutiny (1824)

**b. Indian Soldiers Mutiny at Vellore (1806)**

c. Sholapur Mutiny (1838)

d. Assam Soldiers Mutiny (1824)

e. Answer not known

1857 ஆம் ஆண்டு கிளர்ச்சிக்கு முந்தைய மற்றும் மிகவும் பிரபலமான கலகங்களில் இதுவும் ஒன்று?

a. பூர்வீக காலாட்படை கலகம் (1824) b. வேலூர் இந்திய சிப்பாய்கள் கலகம் (1806)

c. ஷோலாப்பூர் கலகம் (1838) d. அசாம் சிப்பாய் கலகம் (1824)

e. விடை தெரியவில்லை

43. Which of the following statement(s) is/are true?

(i) Mahakavi Bharathiar was a pioneer of modern Tamil poetry and is considered one of the greatest tamil literacy figures of all time

(ii) Bharathiar was the forerunner of a forceful kind of drama that combined classical and contemporary elements.

**a. (i) only** b. (ii) only c. Both (i) and (ii)

d. None of the above e. Answer not known

பின்வரும் வாக்கியம் (வாக்கியங்களில்) எவை சரியானவை?

(i) மகாகவி பாரதியார் நவீன தமிழ்க் கவிதையின் முன்னோடி மற்றும் எல்லா காலத்திலும் சிறந்த தமிழ் இலக்கியவாதிகளில் ஒருவராகக் கருதப்படுகிறார்.

(ii) பாரம்பரிய மற்றும் சமகால கூறுகளை இணைத்த ஒரு வலிமையான நாடகத்தின் முன்னோடி பாரதியார் ஆவார்.

a. (i) மட்டும் b. (ii) மட்டும் c. (i) மற்றும் (ii) மட்டும்

d. மேற்கண்ட எவையுமில்லை e. விடை தெரியவில்லை

44. At which Railway station in South Africa Gandhiji was evicted from a train?

**a. Pietermaritzburg** b. Johannesburg c. Kroonstad

d. Hatfield e. Answer not known

தென்னாப்பிரிக்காவில் எந்த இரயில் நிலையத்தில் காந்தி இரயிலில் இருந்து வெளியேற்றப்பட்டார்?

a. பீட்டர்மரிட்ஸ்பர்க் b. ஜோகன்னஸ்பர்க் c. குரூன்ஸ்டாட்

d. ஹாட்ஃபீல்ட் e. விடை தெரியவில்லை

45. The earliest copper plate inscriptions of Cholas discovered in Tamil Nadu are

A. Thiruvalangadu Copper Plates

B. Velvikkudi Copper Plates

C. Velur Palayam Plates

D. Chinnamanur Copper Plates

**a. A only** b. B and D only c. A and C only

d. C and D only e. Answer not known

தமிழ்நாட்டில் கண்டுபிடிக்கப்பட்ட சோழர்களின் ஆரம்பகால செப்புத்தகடு கல்வெட்டுகள்

A. திருவாலங்காடு செப்புப் பட்டயம்
B. வேள்விக்குடி செப்புப் பட்டயம்
C. வேலூர் பாளையம் பட்டயம்
D. சின்னமனூர் செப்புப் பட்டயம்
a. A மட்டும் b. B மற்றும் C மட்டும் c. A மற்றும் C மட்டும்
d. C மற்றும் D மட்டும் e. விடை தெரியவில்லை

46. Which of the following statements are true about Kamaraj?
(i) The political guru of Kamaraj was Satyamurti
(ii) In 1937, he was elected to the legislature from Salem
(iii) Kundah River project came into existence due to his effort
a. (i) only b. (i) and (ii) only c. (i) and (iii) only
d. (ii) and (iii) only e. Answer not known
காமராஜரைப் பற்றிய பின்வரும் கூற்றுகளில் எது சரியானவை?
(i) காமராஜரின் அரசியல் குரு சத்தியமூர்த்தி ஆவார்.
(ii) 1937 இல் சேலத்திலிருந்து சட்டமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார்
(iii) குந்தா ஆறு திட்டம் இவர் முயற்சியால் உருவாக்கப்பட்டது.
a. (i) மட்டும் b. (i) மற்றும் (ii) மட்டும் c. (i) மற்றும் (iii) மட்டும்
d. (ii) மற்றும் (iii) மட்டும் e. விடை தெரியவில்லை

47. Who laid the foundation of Khadhi movement in Rajapalayam?
**a. I.P. Arangasamy Raja** b. Rettaimalai Srinivasan
c. T.M. Nair d. P. Varadarajulu
e. Answer not known
இராஜபாளையத்தில் காதி இயக்கத்திற்கு அடித்தளம் அமைத்தவர் இவர்
a. ஐ.பி. அரங்கசாமி ராஜா b. இரட்டைமலை சீனிவாசன்
c. டி.எம் நாயர் d. பி. வரதராஜிலு
e. விடை தெரியவில்லை

48. As per the context mentioned in Kalingathupparani, the word 'Yoga' means
a. Doing exercise b. Reciting mantras c. worshipping
**d. Concentration** e. Answer not known
கலிங்கத்துப் பரணியில் குறிப்பிடப்பட்டுள்ள 'யோகா' என்ற சொல்லின் பொருள் விளக்கம்
a. உடற் பயிற்சி செய்தல் b. மந்தரங்ககள் ஓதுதல் c. வழிபடுதல்
d. மனதை ஒருமுகப்படுத்துதல் e. விடை தெரியவில்லை

49. Read the following passage and answer the item that follows.
Populations that occupy separate geographical areas. Because of their geographical separation, they can not interbreed, but would be expected to do so if the geographic barrier between them were removed. The separated populations evolve independently and adapt to their respective environments, generating reproductive barriers between them as a result of their separate evolutionary paths.
This passage is insisting.
**a. Allopatric speciation** b. Peripatric speciation
c. Sympatric speciation d. Parapatric speciation
e. Answer not known
பின்வரும் பத்தியை படித்து, அதற்கான கேள்விக்கு பதிலளிக்கவும்.
உயிரினங்கள் தனித்தனி புவியியல் பகுதிகளை ஆக்கிரமித்துள்ளன. அவற்றின் புவியியல் பிரிவின் காரணமாக அவை இனக்கலப்பு செய்ய முடியாது, ஆனால் அவற்றுக்கிடையேயான புவியியல் தடை நீக்கப்பட்டால் அவ்வாறு நடக்குமென்று எதிர்பார்க்கப்படும். பிரிக்கப்பட்ட உயிரினங்கள் சுயாதீனமாக உருவாகிறது மற்றும் அந்தந்த சூழலுக்கு ஏற்றது, தனித்தனியான

பரிணாமப் பாதைகளின் விளைவாக அவற்றுக்கிடையே இனப்பெருக்கத் தடைகளை உருவாக்குகிறது.
இந்தப் பத்தி எதை வலியுறுத்துகிறது.

a. வேற்றிட உயிரினத் தோற்றம்
b. குற்றினத் தோற்றம்
c. ஓரிட உயிரினத் தோற்றம்
d. இணை வாழிடச் சிறப்பினைத் தோற்றம்
e. விடை தெரியவில்லை

50. Which of the following statements are mentioned in National sports policy of 2001?
(i) Upgradation and development of infrastructure
(ii) Incentives to promote sports
(iii) Enhance participation of women, scheduled Tribes and rural youths
(iv) Creating more sports universities

a. (i) and (ii) only
b. (i), (ii) and (iv) only
c. (i) and (iv) only
d. (i), (ii) and (iii) only
e. Answer not known

பின்வருவனவற்றுள் எவை 2001-ஆம் ஆண்டு தேசிய விளையாட்டு கொள்கையில் இடம்பெற்ற கூற்றுகள்?
(i) உள்கட்டமைப்பை முன்னேற்றுதல் மற்றும் மேம்படுத்துதல்.
(ii) ஊக்கத்தொகைகள் மூலம் விளையாட்டுகளை முன்னேற்றுவது.
(iii) பெண்கள், பழங்குடியினர் மற்றும் கிராமப்புற இளைஞர்களின் பங்கேற்பினை மேம்படுத்துதல்.
(iv) அதிக அளவில் விளையாட்டுப் பல்கலைக்கழகங்களை உருவாக்குதல்.

a. (i) மற்றும் (ii) மட்டும்
b. (i), (ii) மற்றும் (iv) மட்டும்
c. (i) மற்றும் (iv) மட்டும்
d. (i), (ii) மற்றும் (iii) மட்டும்
e. விடை தெரியவில்லை

51. Identify the wrongly matched pair
1. Bodoland people's front - Jharkhand
2. Hill state people's democratic party – Assam
3. Lok Jansakthi party – Bihar
4. Rashtriya Loktantrik party – Rajasthan

a. 1 and 3
b. 2 and 4
**c. 1 and 2**
d. 3 and 4
e. Answer not known

தவறாக பொருந்தப்பட்ட இணையை அடையாளம் காண்க.
1. போடோலாந்த் மக்கள் இயக்கம் - ஜார்கண்ட்
2. மலை மாநில மக்கள் ஜனநாயகக் கட்சி – அஸ்ஸாம்
3. லோக் ஜனசக்தி கட்சி – பீகார்
4. ராஷ்ரிய லோக்தந்த்ரிக் கட்சி – ராஜஸ்தான்

a. 1 மற்றும் 3
b. 2 மற்றும் 4
**c. 1 மற்றும் 2**
d. 3 மற்றும் 4
e. விடை தெரியவில்லை

52. Insulin was discovered by

a. Alex and Nicholas
b. Mayer and Wilson
**c. Banting and Best**
d. Robert and Jacob
e. Answer not known

இன்சுலினை முதன் முதலாக கண்டறிந்தவர்கள்

a. அலெக்ஸ் மற்றும் நிகோலஸ்
b. மேயர் மற்றும் வில்சன்
c. பேண்டிங் மற்றும் பெஸ்ட்
d. ராபர்ட் மற்றும் ஜேக்கப்
e. விடை தெரியவில்லை

53. Choose the right matches among the following
1. Hindu Widow's Remarriage Act - 1856
2. Bengal Sati Regulation - 1829
3. Madras Non-Brahmin Association - 1919

4. Hindu Religious Endowment Act - 1821
a. 1 and 3 are correct **b. 1 and 2 are correct** c. 2 and 3 are correct
d. 3 and 4 are correct e. Answer not known
கீழே கொடுக்கப்பட்டவற்றுள் சரியான பொருத்தங்களைத் தேர்வு செய்க
1. இந்து விதவை மறுதிருமணச் சட்டம் - 1856
2. வங்க சதி ஒழுங்குமுறை - 1829
3. மெட்ராஸ் பிராமணர் அல்லாதோர் சங்கம் - 1919
4. இந்து சமய அறநிலையச் சட்டம் - 1821
a. 1 மற்றும் 3 மட்டும் சரி b. 1 மற்றும் 2 மட்டும் சரி c. 2 மற்றும் 3 மட்டும் சரி
d. 3 மற்றும் 4 மட்டும் சரி e. விடை தெரியவில்லை

54. Name the female speaker at the Congress Radio who possessed a startlingly rich voice and sharp expression.
a. Kokila Ben b. Kamala Ben **c. Usha Mehta**
d. Anita Ben e. Answer not known
காங்கிரஸ் கட்சியின் வானொலியில் பணியாற்றிய திடுக்கிடும் செய்தியை வாசிப்பதில் தேர்ச்சிப்பெற்ற மற்றும் நேர்த்தியான வார்த்தை உச்சரிப்பை கொண்ட பெண்மணி
a. கோகிலா பென் b. கமலா பென் c. உஷா மேத்தா
d. அனிதா பென் e. விடை தெரியவில்லை

55. Which Azhwaar sang devotional songs in the guise of folk songs?
a. Aandaal b. Thiruppan azhawaar c. Thirumazhisai azhwaar
**d. Thirumangai azhwaar** e. Answer not known
நாட்டுப் பாடல் சாயலில் பக்திப் பாடல்கள் பாடிய ஆழ்வார் யார்?
a. ஆண்டாள் b. திருப்பாணாழ்வார் c. திருமழிசையாழ்வார்
**d. திருமங்கையாழ்வார்** e. விடை தெரியவில்லை

56. Pickout the correct pair from the pairs given
a. City Lights - Epic movies
b. The Great Dictator – comedy Actor
c. Charlie Chaplin – Award winning movie
**d. Modern Times – Research movie**
e. Answer not known
கீழே கொடுக்கப்பட்டுள்ளவற்றில் சரியான இணையைத் தேர்வு செய்க
a. சிட்டி லைட்ஸ் - காவியப்படம்
b. தி கிரேட் டிக்டேட்டர் - கேலிச் சித்திர நடிகர்
c. சார்லி சாப்ளின் - சாதனைப் படம்
**d. மாடர்ன் டைம்ஸ் - ஆராய்ச்சி படம்**
e. விடை தெரியவில்லை

57. Who wrote the book "Manumurai Kanda Vasakam"?
a. U.Ve. Saminathar **b. Ramalinga Adigal** c. Dhamodar
d. Vaikunda Swamigal e. Answer not known
"மனுமுறை கண்ட வாசகம்" என்ற நூலை எழுதியவர் யார்?
a. உ.வே. சாமிநாதர் b. இராமலிங்க அடிகள் c. தாமோதரர்
d. வைகுண்ட சாமிகள் e. விடை தெரியவில்லை

58. Who was the first and the only Governor-General from Madras Presidency in the Dominion of India?
**a. C. Rajagopalachariar** b. R.K. Shanmugam Chetti
c. M. Bhakthavatchalam d. Lord Mountbatten

e. Answer not known

ஆதிக்க இந்தியாவின் முதல் மற்றும் சென்னை மாகாணத்தைச் சேர்ந்த ஒரே கவர்னர் ஜெனரல் யார்?

a. சி. இராசகோபாலாச்சாரியார் b. ஆர்.கே. சண்முகம் செட்டி

c. எம். பக்தவத்சலம் d. லார்ட் மவுண்ட் பேட்டன்

e. விடை தெரியவில்லை

59. Ilangovadigal, who wrote silappathikaram was a

a. Buddhist monk **b. Jain monk** c. Hindu saint

d. Christian e. Answer not known

சிலப்பதிகாரத்தை இயற்றிய இளங்கோவடிகள் ஒரு

a. புத்த துறவி b. சமணத் துறவி c. இந்து துறவி

d. கிருஸ்துவர் e. விடை தெரியவில்லை

60. Match the following from List I with List II and Choose the correct option.

| List I | List II |
|---|---|
| A. Kurinji | 1. Indra |
| B. Mullai | 2. Murugan |
| C. Marudam | 3. Thirumal |
| D. Neydal | 4. Varuna |

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| **a.** | **2** | **3** | **1** | **4** |
| b. | 3 | 2 | 1 | 4 |
| c. | 2 | 1 | 3 | 4 |
| d. | 3 | 1 | 2 | 4 |

e. Answer not known

வரிசை Iல் உள்ளதை IIம் வரிசையுடன் பொருந்தி சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.

| வரிசை I | வரிசை II |
|---|---|
| A. குறிஞ்சி | 1. இந்திரன் |
| B. முல்லை | 2. முருகன் |
| C. மருதம் | 3. திருமால் |
| D. நெய்தல் | 4. வருணன் |

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| **a.** | **2** | **3** | **1** | **4** |
| b. | 3 | 2 | 1 | 4 |
| c. | 2 | 1 | 3 | 4 |
| d. | 3 | 1 | 2 | 4 |

e. விடை தெரியவில்லை

61. Choose the right answer among type which of the following statements are true about Justice Party?

(i) In order to safeguard the interest of non-Brahmins, in August 1917 to organize a Party called the South Indian Liberal Federation

(ii) South Indian Liberal Federation popularly known as Justice Party

(iii) Justice Party is considered as the start of Dravidian Movement

a. (i) only b. (i) and (iii) only **c. (i) and (ii) only**

d. (i), (ii) and (iii) only e. Answer not known

நீதிக்கட்சியைப் பற்றிய பின்வரும் கூற்றுகளில் எது சரியானது என்பதை தேர்ந்தெடுக்கவும்.

(i) பிராமணர் அல்லாதவர்களின் நலன்களைக் காக்க ஆகஸ்ட் 1917 இல் தென்னிந்திய தாராளவாதக் கூட்டமைப்பு என்ற கட்சியை ஏற்பாடு செய்தார்

(ii) தென்னிந்திய தாராவாத கூட்டமைப்பு நீதிக்கட்சி என்று அறியப்படுகிறது
(iii) நீதிக்கட்சி திராவிட இயக்கத்திற்கு ஒரு முன்னோடியாக கருதப்படுகிறது
a. (i) மட்டும் b. (i) மற்றும் (iii) மட்டும் c. (i) மற்றும் (ii) மட்டும்
d. (i), (ii) மற்றும் (iii) சரி e. விடை தெரியவில்லை

62. Which Tamil writer is adulated as: "Kaadu Kamazhum, Karpoora Sorko Karpanai Ootraam Kadhayin Puthaiyal?
**a. Bharathiyar** b. Bharathidasn c. Suradha
d. Vanithasan e. Answer not known
"காடு கமழும் கற்பூரச் சொற்கோ
கற்பனை ஊற்றாம் கதையின் புதையல்" எனப் புகழப்படுபவர் யார்?
a. பாரதியார் b. பாரதிதாசன் c. சுரதா
d. வாணிதாசன் e. விடை தெரியவில்லை

63. Which was the first collection of modern poetry released in Tamil?
a. Kakitha Pookkal **b. Puthukkuralgal** c. Kaatrile Mithantha kavithai
d. Merkuri Pookkal e. Answer not known
தமிழில் வெளிவந்த முதல் புதுக்கவிதைத் தொகுப்பு எது?
a. காகிதப் பூக்கள் b. புதுக்குரல்கள் c. காற்றிலே மிதந்த கவிதை
d. மெர்க்குரிப் பூக்கள் e. விடை தெரியவில்லை

64. Who wrote; "Evvazhi Nallavar Aadavar
Avvazhi Nallai; Nilanae!"?
a. Baranar b. Kabilar **c. Avvaiyar**
d. Velliveedhiyaar e. Answer not known
"எவ்வழி நல்லவர் ஆடவர்,
அவ்வழி நல்லை; வாழிய நிலனே"
என்று பாடிய புலவர் யார்?
a. பரணர் b. கபிலர் c. ஔவையார்
d. வெள்ளிவீதியார் e. விடை தெரியவில்லை

65. Among the kadaiyelu Vallal who offered Neelamani and Nagam thantha Kalingam to the Sivan?
a. Kaari b. Oori **c. Aai Andiran**
d. Nalli e. Answer not known
கடையேழு வள்ளல்களில் நீலமணியையும், நாகம் தந்த கலிங்கத்தையும் சிவனுக்கு அளித்தவர் யார்?
a. காரி b. ஓரி c. ஆய் அண்டிரன்
d. நல்லி e. விடை தெரியவில்லை

66. Which of the following is NOT a priority for Social Welfare Schemes of the government?
a. Protection of Women b. Protection of the Aged
c. Protection of Children **d. Protection of Environment**
e. Answer not known
பின்வருவனவற்றுள் எது அரசின் சமூக நலத் திட்டங்களின் முன்னுரிமையில் இல்லாதது?
a. பெண்கள் பாதுகாப்பு b. வயது வந்தோர் பாதுகாப்பு
c. குழந்தைகள் பாதுகாப்பு d. சுற்றுச்சூழல் பாதுகாப்பு
e. விடை தெரியவில்லை

67. When was the Madras state renamed as Tamil Nadu and who was appointed as the Chief Minister of Tamil Nadu?
a. 1965 Subbarayalu Reddiyar b. 1967 Kamaraj **c. 1969 Annadurai**
d. 1972 Annadurai e. Answer not known
மெட்ராஸ் மாநிலம் எப்போது தமிழ்நாடு என்று பெயர் மாற்றப்பட்டது மற்றும் அந்த முதலமைச்சர் யார்?
a. 1965 சுப்பராயலூ ரெட்டியார் b. 1967 காமராஜர்
c. 1969 அண்ணாதுரை d. 1972 அண்ணாதுரை
e. விடை தெரியவில்லை

68. According to Census 2011, ________ district of Tamil Nadu has the lowest child sex ratio.
**a. Ariyalur** b. Cuddalore c. Madurai
d. Theni e. Answer not known
2011-ஆம் ஆண்டின் மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி, தமிழ்நாட்டின் எந்த மாவட்டம் மிகக் குறைவான குழந்தைப் பாலின விகிதத்தைக் கொண்டுள்ளது?
a. அரியலூர் b. கடலூர் c. மதுரை
d. தேனி e. விடை தெரியவில்லை

69. Which Indian city is called as "Detroit of Asia"?
a. Delhi b. Mumbai c. Bangalor
**d. Chennai** e. Answer not known
எந்த இந்திய நகரம் "ஆசியாவின் டெட்ராய்டு" என அழைக்கப்படுகிறது?
a. டெல்லி b. மும்பை c. பெங்களூர்
d. சென்னை e. விடை தெரியவில்லை

70. Which is not the non-commercial energy resource of villages and towns?
a. Fuel Wood b. Agricultural Wastes **c. Hydro Energy**
d. Animal Dung e. Answer not known
கிராமங்கள் மற்றும் நகரங்களின் வணிகம் சாராத ஆற்றல் வளம் ___________ இல்லை
a. மர எரிபொருளில் b. விவசாய கழிவுகளில் c. நீர் ஆற்றலில்
d. விலங்கு சாணத்தில் e. விடை தெரியவில்லை

71. Which state has the highest percentage of Urban Population in India as per 2011 census?
a. Keral **b. Tamilnadu** c. Gujarat
d. Maharashtra e. Answer not known
2011 மக்கட் தொகைக் கணக்கெடுப்பின் படி இந்தியாவில் அதிக சதவிகித நகர்புற மக்கள் தொகையைக் கொண்ட மாநிலம் எது?
a. கேரளா b. தமிழ்நாடு c. குஜராத்
d. மகாராஷ்ட்ரா e. விடை தெரியவில்லை

72. Kaya Kalp award is related to which field?
a. Education **b. Public health care** c. Sports
d. Yoga e. Answer not known
காய கல்ப் விருது எந்தத் துறையுடன் தொடர்புடையது?
a. கல்வி b. பொது சுகாதாரம் c. விளையாட்டு
d. யோகா e. விடை தெரியவில்லை

73. The concept of _________ concentrates on deprivation in long lively knowledge and a decent living standard of human life.

a. Gender Inequality Index (GII) **b. Human Poverty Index (HPI)**
c. Gender Development Index d. Human Resource Index
e. Answer not known

_________ என்ற கருத்து நீண்ட வாழும் காலம், அறிவு மற்றும் மனித வாழ்க்கையின் கௌரவமான வாழ்க்கைத் தரம் ஆகியவற்றில் உள்ள இழப்பில் கவனம் செலுத்துகிறது.

a. பாலின சமத்துவமின்மை குறியீடு b. மனித வறுமை குறியீடு
c. பாலின வளர்ச்சி குறியீடு d. மனித வள குறியீடு
e. விடை தெரியவில்லை

74. Assertion (A): Tamilnadu is entirely dependent on rain for recharging its water resources.

Reason (R): The failure of monsoon lead to acute water scarcity and Severe Drought in Tamil Nadu

a. (A) is True, (R) is False
**b. Both (A) and (R) are True and R is the correct explanation of (A)**
c. (A) is False, (R) is True
d. Both (A) and (R) are Ture but (R) is not the correct explanation of (A)
e. Answer not known

கூற்று (A): தமிழ்நாட்டில் நீர் நிலைகள் நிரம்ப முழுமையாக மழையை சார்ந்துள்ளது

காரணம் (R): தமிழ்நாட்டில் பருவ கால மழை பெய்யாமையால் தண்ணீர் பஞ்சம் மற்றும் கடுமையான வறட்சி நிலவுகின்றது.

a. (A) சரி ஆனால் (R) தவறு
b. (A) மற்றும் (R) இரண்டும் சரி மற்றும் (R) என்பது (A)-க்கு சரியான விளக்கம்
c. (A) தவறு ஆனால் (R) சரி
d. (A) மற்றும் (R) இரண்டும் சரி ஆனால் (R) என்பது (A)-ற்க்கு சரியான விளக்கம்
e. விடை தெரியவில்லை

75. In Tamil Nadu, The Digital Accelerator Scheme is aimed __________

a. To start Educational Institutions **b. To start new Industries**
c. To open number of Banks d. To eradicate crimes
e. Answer not known

தமிழ்நாட்டில், எண்ணிலக்க முடுக்கி திட்டத்தின் நோக்கம்

a. புதிய கல்வி நிறுவனங்களை தொடங்குவது b. புதிய தொழில்சாலைகளை தொடங்குவது
c. அதிக வங்கி கிளையை திறப்பது d. குற்றங்களை போக்குதல்
e. விடை தெரியவில்லை

76. 35 cycles were produced in five days by a company then the number of cycles the can be produced in 21 days is _________

a. 170 b. 150 **c. 147** d. 100 e. Answer not known

ஒரு மிதிவண்டி உற்பத்தி செய்யும் நிறுவனம் 35 மிதிவண்டிகளை ஐந்து நாட்களில் உற்பத்தி செய்கிறது. எனில் அந்நிறுவனம் 21 நாட்களில் உற்பத்தி செய்யும் மிதிவண்டிகளின் எண்ணிக்கை

a. 170 b. 150 **c. 147** d. 100 e. விடை தெரியவில்லை

77. At what rate of Simple Interest will Rs 350 amount to Rs 455 in 6 years?

a. 15% b. 25% c. 10% **d. 5%** e. Answer not known

Rs. 350 என்ற அசலானது 6 ஆண்டுகளில் கூடுதல் Rs. 455 ஆக கிடைக்கப்பெற்றால் அதன் வட்டிவீதம் காண்க.

a. 15% b. 25% c. 10% **d. 5%** e. விடை தெரியவில்லை

78. Find the wrong number in the series: 3, 8, 15, 24, 34, 48, 63
a. 15 b. 24 **c. 34** d. 48 e. Answer not known
3, 8, 15, 24, 34, 48, 63 என்ற தொடரில் தவறான எண்ணைக் காண்
a. 15 b. 24 **c. 34** d. 48 e. விடை தெரியவில்லை

79. Find the next number in the given sequence.
1, 1, 2, 3, 5, 8, 13, 21, 34, ___
a. 50 **b. 55** c. 60 d. 65 e. Answer not known
1, 1, 2, 3, 5, 8, 13, 21, 34, ___ என்ற தொடரில் அடுத்த எண்ணைக் காண்க?
a. 50 **b. 55** c. 60 d. 65 e. விடை தெரியவில்லை

80. If 1 + 2 + 3 + … + n = k then $1^3+2^3+3^3+...+n^3$ is equal to
**a.** $k^2$ b. $k^3$ c. $\frac{k(k+1)}{2}$ d. $(k+1)^3$ e. Answer not known
1 + 2 + 3 + … + n = k எனில் $1^3+2^3+3^3+...+n^3$ என்பத
**a.** $k^2$ b. $k^3$ c. $\frac{k(k+1)}{2}$ d. $(k+1)^3$ e. விடை தெரியவில்லை

81. In the following sequence of instructions 1 stands for run, 2 stands for stop, 3 stands for go, 4 stands for sit and 5 stands for wait. If the sequence were continued, which instruction will come next?
4 4 5 4 53 4 5 3 1 4 5 3 1 2 4 5 4 5 3 4 5 3
a. Wait b. Sit **c. Run** d. Stop e. Answer not known
பின்வரும் தொடர்வரிசை குறிப்பின்படி 1 என்பது ஓடு, 2 என்பது நில், 3 என்பது போ, 4 என்பது உட்காரு, 5 என்பது பொறு. தோடர்வரிசை தொடரும் எனில் குறிப்பின் படி எது வரும்?
a. பொறு b. உட்காரு c. ஓடு d. நில் e. விடை தெரியவில்லை

82. If MACHINE is coded as 19 – 7 – 9 – 14 – 15 – 20 – 11 how will you code DANGER = _________?
a. 11 – 7 – 20 – 16 – 11 – 24 b. 13 – 7 – 20 – 9 – 11 – 25
**c. 10 – 7 – 20 – 13 – 11 – 24** d. 11 – 7 – 20 – 10 – 11 – 25
e. Answer not known
If MACHINE என்பது எனக் குறிக்கப்பட்டால் DANGER என்பது எவ்வாறு குறிக்கப்படும்?
a. 11 – 7 – 20 – 16 – 11 – 24 b. 13 – 7 – 20 – 9 – 11 – 25
**c. 10 – 7 – 20 – 13 – 11 – 24** d. 11 – 7 – 20 – 10 – 11 – 25
e. விடை தெரியவில்லை

83. The product of Kumaran's age (in years) two years ago and his age four years from now is one more than twice his present age. What is his present age?
a. 6 b. 5 c. 4 **d. 3** e. Answer not known
குமரனின் தற்போதைய வயதின் இருமடங்கோடு ஒன்றைக் கூட்டினால் கிடைப்பது, குமரனின் இரண்டாண்டுகளுக்கு முந்தைய வயதையும் அவரின் 4 ஆண்டுகளுக்கும் பிந்தைய வயதையும் பெருக்கக் கிடைப்பதற்குச் சமம் எனில், அவரின் தற்போதைய வயதைக் காண்க.
a. 6 b. 5 c. 4 **d. 3** e. விடை தெரியவில்லை

84. Siva Kumar is 7 times as old as his daughter Preethi. After 5 years he will be 4 times as old as his daughter. What are their present ages?
**a. 5, 35** b. 6, 36 c. 7, 42 d. 4, 32 e. Answer not known

சிவகுமாரின் வயது அவரது மகள் பிரீத்தியின் வயதைப் பொல 7 மடங்கு ஆகும். 5 ஆண்டுகளுக்குப் பின்னர் அவர் வயது மகளின் வயதைப் போல 4 மடங்கு இருக்கும். அவர்களின் தற்போதைய வயது என்ன?

**a. 5, 35** b. 6, 36 c. 7, 42 d. 4, 32 e. விடை தெரியவில்லை

85. 8 farmers can plough a field in 18 days. Find the number of days required for 12 farmers to plough the same field.

a. 22 days **b. 12 days** c. 10 days c. 15 days e. Answer not known

8 விவசாயிகள் 18 நாள்களில் நிலத்தை உழுது முடிக்கின்றனர் எனில், அதே நிலத்தை 12 விவசாயிகள் எத்தனை நாள்களில் உழுது முடிப்பர்.

a. 22 நாட்கள் b. 12 நாட்கள் c. 10 நாட்கள்

d. 15 நாட்கள் e. விடை தெரியவில்லை

86. 2 men and 3 boys can do a piece of work in 10 days while 3 men and 2 boys can do the same work in 8 days. In how many days can 2 men and 1 boy do the work?

**a.** $12\frac{1}{2}$ **days** b. 12 days c. $13\frac{1}{2}$ days

d. 13 days e. Answer not known

2 ஆண்கள் மற்றும் 3 சிறுவர்கள் சேர்ந்து ஒரு வேலையை 10 நாட்களில் செய்து முடிப்பர். அதே வேலையை 3 ஆண்கள் மற்றும் 2 சிறுவர்கள் சேர்ந்து 8 நாட்களில் செய்து முடிப்பர் எனில் 2 ஆண்கள் மற்றும் 1 சிறுவர் சேர்ந்து அவ்வேலையை எத்தனை நாட்களில் முடிக்க முடியும்?

a. $12\frac{1}{2}$ நாட்கள் b. 12 நாட்கள் c. $13\frac{1}{2}$ நாட்கள்

d. 13 நாட்கள் e. விடை தெரியவில்லை

87. The dimensions of a hall is $10m \times 9m \times 8m$. Find the cost of white washing the walls and ceiling at the rate of Rs. 8. 50 per $m^2$

a. Rs. 2,250 b. Rs. 3,320 **c. Rs. 3,349**

d. Rs. 4,449 e. Answer not known

ஒரு கூடத்தின் அளவு 10மீ × 9மீ × 8மீ என்றவாறு உள்ளது. அக்கூடத்தின் சுவர்கள் மற்றும் மேற்கூரைக்கு வெள்ளையடிக்க ஒரு சதுர மீட்டருக்கு ரூ. 8.50 வீதம் ஆகும் மொத்த செலவைக் காண்க.

a. ரூ. 2,250 b. ரூ. 3,320 c. ரூ. 3,349

d. ரூ. 4,449 e. விடை தெரியவில்லை

88. If the total surface area of a cube is 726 $cm^2$ then find its volume.

a. 627 $cm^3$ b. 276 $cm^3$ **c. 1331** $cm^3$

d. 3311 $cm^3$ e. Answer not known

ஒரு கனச்சதுரத்தின் மொத்தப்பரப்பு 726 செமீ$^2$ எனில் அதன் கன அளவு

a. 627 செமீ$^2$ b. 276 செமீ$^2$ c. 1331 செமீ$^2$

d. 3311 செமீ$^2$ e. விடை தெரியவில்லை

89. The compound interest as Rs. 3,000 for 3 years at 10% per annum Compounded annually is

a. Rs. 900 b. Rs. 933 c. Rs. 963

**d. Rs. 993** e. Answer not known

ரூ. 3,000 க்கு 10% ஆண்டு வட்டி வீதத்தில் 3 ஆண்டுகளுக்கு, ஆண்டுக்கொரு முறை வட்டி கணக்கிடப்பட்டால் கிடைக்கும் கூட்டு வட்டி

a. ரூ. 900 b. ரூ. 933 c. ரூ. 963

d. ரூ. 993 e. விடை தெரியவில்லை

90. The difference between simple interest and compound interest on Rs. 1,200 for one year at 10% per annum, reckoned half yearly is

a. Rs. 2.50 **b. Rs. 3.00** c. Rs. 3.75
d. Rs. 4.00 e. Answer not known

அரையாண்டிற்கு ஒரு முறை வட்டி கணக்கிடப்பட்டால் ரூ. 1,200 க்கு, ஆண்டு ஒன்றுக்கு 10% வட்டி வீதம் ஓராண்டுக்கு, தனிவட்டிக்கும் கூட்டுவட்டிக்கும் உள்ள வித்தியாசம்

a. ரூ. 2.50 b. ரூ.3.00 c. ரூ. 3.75
d. ரூ. 4.00 e. விடை தெரியவில்லை

91. Which among the following of interest yields an interest of Rs. 200 for the principal of Rs. 2, 000 for one year?

**a. 10%** b. 20% c. 5% d. 15% e. Answer not known

பின்வரும் வட்டி வீதத்தில் எது RS. 2,000 அசலுக்கு ஓராண்டுக்கு Rs. 200 ஐ தனி வட்டியாகக் கொடுக்கக் கூடியதாக இருக்கும்?

**a. 10%** b. 20% c. 5% d. 15% e. விடை தெரியவில்லை

92. In Simple Interest, a sum of money amounts to Rs. 6,200 in 2 years and Rs. 6, 800 in 3 years. Find the principal and rate of interest.

a. Rs. 4,000, $i$ = 15% **b. Rs. 5,000, $i$ = 12%** c. Rs. 6,000, $i$ = 10%
d. Rs. 3,000, $i$ = 20% e. Answer not known

ஒரு தொகை ஒரு குறிப்பிட்ட தனிவட்டி வீதத்தில் 2 ஆண்டுகளில் Rs. 6,200 எனவும் 3 ஆண்டுகளில் Rs. 6,800 எனவும் உயர்கிறது எனில் அந்த தொகையையும், வட்டி வீதத்தையும் காண்க.

a. Rs. 4,000, $i$ = 15% **b. Rs. 5,000, $i$ = 12%** c. Rs. 6,000, $i$ = 10%
d. Rs. 3,000, $i$ = 20% e. விடை தெரியவில்லை

93. The reciprocal ratio of 9 : 121 is

a. 3 : 11 b. 6 : 22 c. 11 : 2 **d. 121 : 9** e. Answer not known

9 : 121 ன் தலைகீழியின் விகிதம்

a. 3 : 11 b. 6 : 22 c. 11 : 2 **d. 121 : 9** e. விடை தெரியவில்லை

94. The ratio of the volumes of a cylinder a cone and a sphere if each has the same diameter same height is

a. 1 : 2 : 3 b. 2 : 1 : 3 c. 1 : 3 : 2
**d. 3 : 1 : 2** e. Answer not known

விட்டம் மற்றும் உயரம் ஒரே மாதிரியான உருளை கூம்பு மற்றும் கோளத்தின் கன அளவுகளின் விகிதம்

a. 1 : 2 : 3 b. 2 : 1 : 3 c. 1 : 3 : 2
**d. 3 : 1 : 2** e. விடை தெரியவில்லை

95. The product of two numbers is 432 and their LCM and HCF are 72 and 6 respectively. If one of the numbers is 24 then the other number is

a. 16 **b. 18** c. 22 d. 36 e. Answer not known

இரு எண்களின் பெருக்கற்பலன் 432 மற்றும் அவைகளின் மீ.சி.ம. மற்றும் மீ.பொ.வ. முறையே 72 மற்றும் 6 ஆகும். அவ்வெண்களில் ஒரு எண் 24 எனில் மற்றொரு எண்

a. 16 **b. 18** c. 22 d. 36 e. விடை தெரியவில்லை

96. The LCM of two numbers is 6 times their HCF. If the HCF is 12, and one of the numbers is 36. Then the other number is

a. 72 b. 36 **c. 24** d. 12 e. Answer not known

இரு எண்களின் மீ.பொ.ம ஆனது. அந்த இரண்டு எண்களின் மீ.பொ.வ. வின் 6 மடங்குகாகும். மீ.பொ.வ. 12 மற்றும் ஒரு எண் 36 எனில் மற்றொரு எண்.

a. 72 b. 36 **c. 24** d. 12 e. விடை தெரியவில்லை

97. The greatest number that will divide 62, 78 and 109 leaving remainders 2, 3 and 4 respectively. Find the HCF.

**a. 15** b. 16 c. 12 d. 13 e. Answer not known

62, 78, 109 ஐ வகுத்து முறையே 2, 3 மற்றும் 4 மீதிகளாகக் கொடுக்கும் மீப்பெரு பொதுக் காரணி காண்க.

**a. 15** b. 16 c. 12 d. 13 e. விடை தெரியவில்லை

98. Find the ratio of the HCF and LMC of the numbers 18 and 30

a. 1 : 18 b. 1 : 30 c. 18 : 30 **d. 1 : 15** e. Answer not known

18 மற்றும் 30 ஆகிய எண்களின் மீ.பெ.க. மற்றும் மீ.சி.ம வின் விகிதம் காண்க.

a. 1 : 18 b. 1 : 30 c. 18 : 30 **d. 1 : 15** e. விடை தெரியவில்லை

99. What percent of 850 metres is 225 metres?

a. 26.49% b. 26.48% **c. 26.47%**
d. 26.46% e. Answer not known

850 மீட்டரில் 225 மீட்டர் என்பது எத்தனை சதவீதம்?

a. 26.49% b. 26.48% **c. 26.47%**
d. 26.46% e. விடை தெரியவில்லை

100. Among the residents of a street, 65% speak Tamil, 52% speak Hindi, 40% speak Malayalam, 30% speak both Tamil and Malayalam. 32% speak both Tamil and Hindi, 25% speak both Hindi and Malayalam. If percentage of residents who speak all three languages?

a. 10% b. 80% c. 90% **d. 20%** e. Answer not known

ஒரு தெருவில் வசிப்பவர்களில் 65% பேர் தமிழும், 52% பேர் இந்தியும், 40% பேர் மலையாளமும் பேசுகிறார்கள். 32% பேர் தமிழும் இந்தியும், 30% பேர் தமிழும் மலையாளமும், 25% பேர் இந்தியும், மலையாளமும், 10% இம்மூன்று மொழிகளைத்தவிர மற்ற மொழிகளையும் பேசுகிறார்கள் எனில் மூன்று மொழிகளையும் பேசத் தெரிந்தவர்கள் எத்தனை சதவீதம்?

a. 10% b. 80% c. 90% **d. 20%** e. விடை தெரியவில்லை